## 5.28 2003 – 2004 சுயஉதவிக் குழு மகளிருக்கு வாழ்க்கை தொழிற்பயிற்சி அளித்தல்

சமூகநலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை

அரசாணை (நிலை) எண் 100 நாள் : 10.06.2003

படிக்க:

1. அரசு ஆணை நிலை எண் 118, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 03.06.1998
2. அரசு ஆணை நிலை எண் 87, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 21.05.1999
3. அரசு ஆணை நிலை எண் 72, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 26.05.2000

மேலும் படிக்க :

தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கடித எண் 11492 /டி2/2002 ,நாள் 28.12.2002.

தமிழ்நாடு மகளிர்நல மேம்பாட்டு நிறுவனம் 1990–91ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் நிதியுதவியுடன் ஊரக மகளிர் மேம்பாட்டிற்கென பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்றில், 95 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அளிக்கவும், நடைபெற்ற பயிற்சியின் பயன்களை ஆய்வு செய்யவும் புதிதாக ஈப்பு வாங்கவும் ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டது. படிக்கப்பட்ட அரசு ஆணை இரண்டில் 100 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அளிக்க ரூ.7.50 இலட்சம் அளிக்கப்பட்டது. மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 100 மகளிர்க்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சியளிக்க ரூ.7.50 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

2. படிக்கப்பட்ட கடிதத்தில், 2003–2004ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் 12500 மகளிர்க்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் ரூ.100.00 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில்சார்ந்த மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இத்திட்டத்திற்கு நிதிநிலைக்குழு ரூ.100.00 இலட்சத்தில் 2003–2004ஆம் ஆண்டு பகுதி II திட்டமாகக் கொண்டு வர ஒப்புதல் அளித்துள்ளது.

4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை ஏற்று, வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 12500 மகளிர்க்கு தொழில்முனைவோர் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் சார்ந்த மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சியை இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்களை மேற்கொள்ள ரு.100.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தைப் பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு சமூகநல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. இச்செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235 சமூகப்பாதுகாப்பும் நலனும் – 02. சமூகநலன் – 103. மகளிர் நலன் – பத்தாவது ஐந்தாண்டு திட்டப்பணிகள் –11 மாநிலத் திட்டங்கள் – தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்கு 109 உதவி மானியங்கள்– 03 குறிப்பிட்ட மாநிலத் திட்டங்களுக்கு மானியங்கள் (து.தொ.கு.எ ண2235–02–103–0935)

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 267/2003, நாள் 03.06.2003–ல் கண்டுள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி.கே. கரியாலி**
அரசு செயலாளர்

**இணைப்பு**

வாழ்க்கைத் திறன் மற்றும் தொழிற்பயிற்சித் திட்டம்

திட்ட செலவின விபரம்

| | | |
|---|---|---|
| மொத்தத் திட்டச் செலவு | : | ரூ.100.00 இலட்சம் |
| பயனாளிகள் எண்ணிக்கை | : | 12500 |
| பயிற்சிக்காலம் | : | 21 வேலை நாட்கள் |
| ஒரு நபருக்கு பயிற்சிக்கான தொகை | : | ரூ.350 |
| மூலப்பொருட்களுக்கானத் தொகை | : | ரூ.450 |
| மொத்தம் | : | ரூ.800 |

மொத்தச் செலவினம் ரூ.800/– வீதம் 12500 பயனாளிகளுக்கு ரூ.800 X 12500 = ரூ.100.00 இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்)

**சி.கே.கரியாலி**
அரசு செயலாளர்